(நாடுகொப்பணமுறை)

**திருநெல்வேலி, முதன்மைக்கல்விஅலுவலரின்செயல்முறைகள்.**
**பிறப்பிப்பவர் : திருசி.முத்துக்கிருஷ்ணன்,** எம்.ஏ., பி.எட்.,எம்.பில்.,பி.டி.சி.,
**மூ.மு.எண். 4390 / அ1 /2021, நாள்– 26.10.2021**

பொருள் : பள்ளிக்கல்வித்துறை – பொதுப்பணிகள் – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு செ. சுதாகர் ஜோசப் என்பவரின் வாரிசுதாரர் மனைவி திருமதி ம.ஜோதி, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. சேரன்மகாதேவி, மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2213/அ1/2016, நாள்.05.06.2017.
2. அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.21925/ஜே/இ4/ 2021, நாள்.09.04.2021.
4. தென்காசி, முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.3280/அ1/2021, நாள்.23.09.2021.

-----

தருமபுரி மாவட்டம், பொன்னாகரம் ஒன்றியம், செல்லக்குடி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பணிபுரிந்து பணிக்காலத்தில் 02.04.2011 அன்று காலமான திரு செசுதாகர் ஜோசப் என்பவரின் வாரிசுதாரர் மனைவி திருமதி ம.ஜோதி என்பவருக்கு பார்வை–1இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக அம்பாசமுத்திரம், உதவி தொடக்கக்கல்வி அலுவலகத்தில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 06.06.2017முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை–2இல் காணும் அரசாணைபத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1இல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level Higher than the Appointing Authority). அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப்பணியாளரின்

Scanned with CamScanner

பணியினைவரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை-2இல் காணும் அரசாணையின்படியும், பார்வை-4இல் காணும் பரிந்துரையின் பேரில் திருமதி ம.ஜோதி என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 06.06.2017முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

பார்வை-3இல் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு, கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களின் பணியினைவரன்முறை செய்யப்பட்டமைக்கு அரசளவில் பதிவு செய்ய ஏதுவாக நடைமுறையில் உள்ளவாறு கருத்துரு தயார் செய்து அசல் + நகல் 3படிகள் அனுப்பப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருமதி ம.ஜோதி பணியேற்றநாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெறவேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு-
அசல் பணிப்பதிவேடு

முதன்மைக்கல்விஅலுவலர்
திருநெல்வேலி

26/10/21

பெறுநர் :
சார்ந்தபணியாளர் (உரியவழியாக)

26.10.2021

நகல் :

1. தென்காசி, முதன்மைக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காக அன்புடன் அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், தென்காசி, சேரன்மகாதேவி.
3. தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, பொட்டல்புதூர்.
4. வட்டாரக் கல்வி அலுவலர், அம்பாசமுத்திரம்,
5. சென்னை, பள்ளிக்கல்வி இணை இயக்குநருக்கு (பணியாளர்தொகுதி) தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with CamScanner